IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 14 /2011

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமமூர்த்தி | Caste | : - |
| Father's Name | : சின்னய்ய கவுண்டர் | Calling | : - |
| Village | : காங்குப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 81 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 23 day of September, 2019.

Cross Examination Continuation

பிரதிவாதி பார்த்திபன் எனது தம்பியா என்று எனக்கு தெரியாது. பார்த்திபனை யார் என்று எனக்கு தெரியாது அவர் எங்கிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு எங்கு சொத்து உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அவர் மீது எதற்கு வழக்கு செய்துள்ளேன் விவரமும் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியான அவரது மனைவியையும் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரமும் எனக்கு தெரியாது. சாட்சி தற்பொழுது நிலம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுகிறார். அதில் 2 ஏக்கர் 54 செண்ட் உள்ளது என்று கூறுகிறார். 2 ஏக்கர் 54 செண்ட்டை பிரதிவாதிகள் வைத்துள்ளாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சொத்து தான் 2 ஏக்கர் 54 செண்ட் வேண்டும் ஆனால் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது வழக்கு தள்ளுபடிசெய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar

DISTRICT MUNSIF

KATPADI.